Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்


பக்கங்கள்-08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி -22 08-11-2003 சனிக்கிழமை ஓசை 263




# அமெ.விலிருந்து நாடுதிரும்பிய பிரதமர் ரணிலுக்கு

# ஆதரவாளர்கள் அணிதிரண்டு பெரும் வரவேற்பு



ஆதரவாளர்கள் மத்தியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

## கட்டு நாயக்காவிலிருந்து கொழும்பு செல்ல 9 மணிநேரத்துக்குமேல் பிடித்தது

(கொழும்பு)

**அமெரிக்காவிலிருந்து நேற்று கொழும்பு திரும்பிய சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பல்லாயிரக்கணக்கான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் வரவேற்றுள்ளனர். கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அவரை அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் வரவேற்ற அதேவேளை பெருமளவு ஆதரவாளர்களும் அங்கு திரண்டிருந்தனர்.**

கட்டு நாயக்கா விமான நிலையத்திலிருந்து அவர் வாகன பவனியாக அலரி மாளிகைக்கு அழைத்துச் செல்லப் பட்டவேளை ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் வீதியில் அணிவகுத்து நின்று வரவேற் பளித்தனர். 25 கிலோமீற்றர் தூரமுள்ள இவ்வீதியை வாகன அணி கடக்க 9 மணித்தியாலங்கள் எடுத்ததாக செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை பாராளுமன்றம் பெரும்பான்மையை அரசாங்கம் தக்கவைத்துள்ளதாகக் காட்டும் பாராளுமன்ற உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்ட ஆவணத்தை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான அமைதி வழிமுறை தொடரும் பாராளுமன்றம் உடன் கூட்டப்பட வேண்டும்

### கட்டு நாயக்கா விமான நிலையத்தில் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளுடனான அமைதி வழிமுறை நிச்சயம் தொடரும், நாடாளுமன்றம் உடன் மீண்டும் கூட்டப்பட வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

அமெரிக்காவிலிருந்து கொழும்பு திரும்பிய ரணில் விக்கிரமசிங்க கட்டுநாயக்க விமான நிலையத்தில் உரையாற்றும் போது மேலும் அவர் தெரிவிக்கையில், 2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மக்கள் வாக களித்த இந்த அரசாங்கத்திற்கு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான கட்டளை ஒன்றை இட்டுள்ளனர். அக்கட்டளையை நான் ஏற்று

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா ஆயுதப்படையினருக்கு பொலிஸ் அதிகாரங்கள்

### - சனாதிபதியால் வழங்கப்பட்டது

படையினருக்கும் சனாதிபதியினால் பொலிஸ் அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. சனாதிபதியினால் நேற்று இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 12 சரத்தின் கீழ் சனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தின் கீழேயே இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இது கடல் வலயத்துக்கும் பொருந்தும். இது தொடர்பில் விசேட வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது.

(32)

### அவுஸ்திரேலியா எச்சரிக்கை

அவுஸ்திரேலியா, அந்த நாட்டுப் பிரஜைகள் இலங்கைக்கு செல்வது குறித்து எச்சரிக்கையை விடுத்துள்ளது. நடைமுறைப் பிரச்சினை காரணமாக இலங்கைக்குச் செல்லும் அவுஸ்திரேலியப் பிரஜைகள் பொது கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் இடங்களில் இருந்து விலகியிருக்குமாறு அவுஸ்திரேலிய அரசாங்கம் கேட்டுள்ளது.

(32)

### - பிரதமர் ரணில் கூட்டிய -

## நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் 129 பா.உ.கள் அரசுக்கு ஆதரவு

பிரதமர் கொழும்புவந்த பின்னர் நேற்றுமாலை நாடாளுமன்ற கட்டடத்தில் நாடாளுமன்ற குழுக்கூட்டம் நடை பெற்றுள்ளது. இதில் ஐ.தே.மு. ஆட்சிக்கு 129 பேர் தங்களின் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். அவர்களின் சார்பில்சபாநாயகருக்கு எதிர்வரும் திங்கட்கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான கடிதம் கையளிக்கப்படவுள்ளது. அதற்கமைய சனாதிபதி நாடாளுமன்ற செயற்பாடுகளை ரத்துச் செய்தமையை விலக்கி நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு இவர்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### - இடைக்கால நிர்வாக சபை -

## தேசாபிமானிகள் அமைப்பு கொழும்பில் எதிர்ப்புக் கூட்டம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்ட வரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கொழும்பு பொரல்லகெம்பல் பூங்காவில் 'தேசாபிமானிகள் அமைப்பு' கூட்டம் ஒன்றை நடத்தியது. இதில் மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் மக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் பெருமளவானோர் பங்குபற்றினர். இதில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, சனாதிபதி பொறுப்பேற்ற மூன்று அமைச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதி பொறுப்பேற்ற அமைச்சுக்கள் மீளக் கையளிக்கப்பட மாட்டாது

### - அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

சனாதிபதி பொறுப்பேற்ற அமைச்சுக்களை திருப்பிக் கையளிக்கப் போவதில்லை என அனுரா கூறியுள்ளார்.

அத்துடன் அதிகாரத்தை திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான காலம் வந்துவிட்டதெனவும் அவர் கூறினார். தேசிய நாட்டுப் பற்று மக்கள் இயக்கத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நேற்று ஹம்பல் பார்க்கில் தேசப்பற்றாளர் முன்னணி இடைக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சி எனக் கூறிக்கொண்டு அரசாங்கம் அதன் நோக்கத்திற்கு மாறாகச் செயற்பட்டது

### - சனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் காரணமாகவும் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளமையாலும் அரசு சமாதான முயற்சி எனக் கூறி அதன் நோக்கத்தையே மாற்றி அமைக்கும் அளவில் செயற்படுவதன்காரணமாகவும் தான் மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்றுள்ளதாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றிரவு தெரிவித்துள்ளார். இரவு 8.00 மணிக்கு நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றமைக்கான காரணம் பற்றி அவர் கூறுகையில்,பாதுகாப்பு அமைச்சு ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் கையளிக்கப்பட்ட பின்னர் 6 தடவைகளுக்கு மேல் புலிகள் ஆயுதங்களைக் கொண்டு வந்து இறக்கியுள்ளனர். ஆனால் அரசு இதனைக் கவனத்தில் எடுக்கவில்லை என்றார். உள்துறை அமைச்சு பொறுப்பேற்றமைப்பற்றிக் கூறுகையில், ஐ.தே.கட்சியினர் ஆட்சிக்கு வந்த பின்னர் பொ.ஐ.முன்னணியின் பல ஆதரவாளர்கள் கொல்லப்பட்டனர். பலர் தாக்கப்பட்டனர். அத்துடன் அரசியல் பழிவாங்கல்கள் நடந்தன.



இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. அத்துடன் குற்றச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலநிலைமை ஒரு போதும் பிரகடனப்படுத்தப்படவில்லையாம்

### சனாதிபதியின் சார்பில் பேச்சாளர் கூறுகிறார்

அவசரகால நிலைமை ஒரு போதும் பிரகடனப்படுத் தப்படவில்லையெனவும், அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தும் அறிவித்தலில் சனாதிபதி கைச்சாத்திடவில்லையெனவும், அத்துடன் அவ்வாறு அறிவித்தல் அச்சிடப்படவில்லையெனவும் சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. எனவே அவசரகால நிலைமையின் பிரகடனம் பற்றியோ,அதனை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ...ரி விளம்பரம்

### வகுப்புக்கள் ஆரம்பம்

Advancer Computing Institution ஊடாக hard ware wep design, programming போன்ற நவீன வகுப்புகளுடன் கணினி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகளும் 15.11.2003 ஆரம்பம். தொடர்புகட்கு திரு.கா. ஜீவலிங்கம் C.C.பாடசாலை அருகே, புதுக்குடியிருப்பு. (3726)

### நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்கு

றொபின் EY20 சிறிது காலம் பாவித்தது விற்பனைக்குண்டு. தொடர்பு:- K.குலேந்திரன் (கரடிப்போக்கு பார் (முன்பாக) கரடிப்போக்குச் சந்தி,கிளிநொச்சி. (3858)

### விதை உழுந்து விற்பனைக்கு

நல்ல ரக விதை உழுந்து விற்பனைக்குண்டு. திருவையாறு விவசாயக் கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி. (3855)

# தொழில்சார் பயிற்சி செயலமர்வில் 150 பேருக்குப் பயிற்சி வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மாணவர் அமைப்பின் ஆதரவில் கிளி. தொழில் நுட்பக்கல்லூரி நடாத்தும் இருநாள் தொழில் சார் பயிற்சி செயலமர்வின் இறுதிநாள் நிகழ்வு நேற்று பி.ப.3.30 மணிக்கு கிளிநொச்சி வலயக்கல்விப்பணிமனை



மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மைவிருந்தினராக தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக தமிழீழக்கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தன், கிளி.வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சிவசாமி, கிளி.கரைச்சி பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன், கிளி.மாவட்ட கல்விப் பேரவைத்தலைவர் கணேசபிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தியதுடன் செயலமர்வில் கலந்து கொண்ட தொழில்பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தனர்.

மேற்படி தொழில்சார் பயிற்சி நெறியில் கிளி.பூநகரி, கண்டாவளை, பளை தொழிற் பயிற்சிநிலையங்களைச் சேர்ந்த 150 பயிற்சியாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (லோ, சோ)

# ஆலங்குளம் துயிலுமில்லத்தில் நேற்று சிரமதானப்பணி

தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டுத் துணுக்காய் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் அரச,அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், பணியாளர்கள்,பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் காலை-மாலை வரையும் துயிலும் இல்லத்தில் சிரமதானப்பணியினைச் செய்துள்ளனர். (24)

# கிளி. உள்ளூராட்சி உ.ஆ புதிய அலுவலக திறப்பு

கிளி.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் புதிய அலுவலகத் திறப்பு விழா நேற்று பகல் 11.00 மணிக்கு கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அருகாமையில் நடைபெற்றது. கிளி. மாவட்ட உள்ளூ



ராட்சி உதவியாணையாளர் தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மங்கலவிளக்கேற்றல் இடம் பெற்றது. அதனைத்தொடர்ந்துதமிழீழ தேசியக்கொடியினை கிளி.மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி ஏற்றிவைத்தார். அடுத்து உள்ளூராட்சி உதவி ஆணையாளர் புதிய அலுவலக கட்டடத்தினை நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடகிழக்கு மகாண உள்ளூராட்சிஆணையாளர் செல்வி மு.விஜயலட்சுமி அவர்கள் சம்பிருதாய பூர்வமாக நாடாவினை வெட்டித்திறந்து வைத்தார்.

நிகழ்வில் கரைச்சிப் பிரதேச செயலாளர் பொன்.நித்தியானந்தன் கிளி. மாவட்டநெக்கோட் நிறுவன உதவித் திட்டப் பணிப்பாளர் கிளி. கூட்டுறவு திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் கிளி. மக்கள் வங்கி முகாமையாளர் கிளிநொச்சி பிரதேச சபை செயலர் பச்சிலைப் பள்ளி பளைப் பிரதேச சபைச் செயலர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பணிநிலை வெற்றிடம்

**செக்கோட் தனியார் நிறுவனம் (SECOTE(PVT) LTD) கட்டடம்,வீதி, நிர்மாணம் /மின்சார இணைப்பு /தகவல் தொழில்நுட்ப நிறுவனம்.**

பணிநிலைகள்:-
- (01) பொறியியலாளர் (குடிசார்)
- (02) கணக்காளர்
- (03) தொழில்நுட்ப உதவியாளர் (TA)
- (04) படவரைஞர்.
- (05) மேற்பார்வையாளர்.
- (06) கணக்குப்பதிவாளர்.
- (07) எழுதுநர்.
- (08) களஞ்சியக்காப்பாளர்.
- (09) ஓட்டுநர்.
- (10) காவலாளி.

பொதுவான தகைமைகள் :-
- 18 அகவையை பூர்த்தி செய்தவராக இருத்தல்வேண்டும்.
- கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பணிபுரியக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

## பணிநிலை ரீதியிலான தகைமைகள்

### பணிநிலை (01)
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல்வேண்டும். (B.S.C.Eng--) (CIVIL)
- கட்டடம், வீதி, நிர்மாணம் தொடர்பான முன் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.

### பணிநிலை (02)
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல்வேண்டும் (B.B.A,B. Com)
- வவுனியா,ரஜரட்டை பல்கலைக்கழகங்களின்தகைமைகள் விரும்பத்தக்கது.

அல்லது

HNDA,NCAT,AAT,(CIMA) போன்ற தகைமைகளில் ஒன்று இருத்தல் வேண்டும்.

### பணிநிலை (03)
- உயர் தொழில் நுட்பக் கல்லூரிச் சான்றிதழ் (NDC/NCT குடிசார் / மின்னியல்) இருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

### பணிநிலை (04)
- உயர் தொழில்நுட்பக் கல்லூரிச் சான்றிதழ்

அல்லது

தொழில் நுட்பக் கல்லூரிச் சான்றிதழ்
- AUTO CAD (ஓட்டோகட்) கணினி அறிவு இருத்தல் வேண்டும்.
- தொழில் முன்னனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.

### பணிநிலை (05)
- தொழில் நுட்பக்கல்லூரியால் வழங்கப்படும் NCT(CIVIL)சான்றிதழ் இருத்தல் வேண்டும் (2ஆம்,3ஆம் வருடத்தை பூர்த்தி செய்தவர்கள்)

### பணிநிலை (06)
- க.பொ.த.(உ/த)இல் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
- ஆங்கில அறிவு இருத்தல்வேண்டும்.
- தொழில் முன்னனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.

### பணிநிலை (07)
- க.பொ.த.(சா/த) சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
- தமிழ், ஆங்கில தட்டச்சு தெரிந்திருத்தல் வேண்டும்.
- கணினி அறிவு (MS office) இருத்தல்வேண்டும்.
- தொழில் முன்னனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது.

### பணிநிலை (08)
- க.பொ.த.(சா/த) சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
- ஓரளவு ஆங்கில அறிவு இருத்தல்வேண்டும்.

### பணிநிலை (09)
- சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல்வேண்டும்.
- இரண்டு வருடத்திற்கும் மேலான அனுபவம் இருத்தல்வேண்டும்.

### பணிநிலை (10)
- 8ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல்வேண்டும்.
- முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நிர்மாண வேலைகளில் ஈடுபடக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி விண்ணப்பங்கள் பூரணப்படுத்தப்பட்ட சுயவிபரக்கோவை உடன் எதிர்வரும் 20.11.2003 திகதிக்கு முன்னதாக கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது அலுவலக நேரங்களில் நேரில் அனுப்பி வைக்கவும்.

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி**

| | |
|---|---|
| செக்கோட் தகவல் தொழில்நுட்பம்,<br>/1 பரமேஸ்வராச் சந்தி,<br>பலாலி - வீதி,<br>யாழ்ப்பாணம். | செக்கோட் தனியார் நிறுவனம்,<br>இல.74, இரத்தினபுரம்,<br>கிளிநொச்சி. |

(3856)

# ஈராக்கில் போலந்து இராணுவ அதிகாரி கெரில்லாக்களால் சுட்டுக் கொலை

(பாக்தாத்)

**ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் போலந்து நாட்டைச் சேர்ந்த இராணுவ அதிகாரியொருவர் கெரில்லாக்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.**

ஈராக்கில் கடமையாற்றும் பல்தேசிய படைகளைச் சேர்ந்த இராணுவத்தினில் அமெரிக்கர் அல்லாத வேறு நாட்டவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டமை இதுவே முதற் தடவை யாகும்.

கெரில்லாத் தாக்குதல்கள் அதிகரித்து வருவதனா மிக மோசமான எதிர்காலத்தை அங்குள்ள இராணுவத்தினர் எதிர் நோக்க வேண்டியிருக்கும் என அமெரிக்காவும், பிரிட்டனும் எச்சரிகை விடுத்த சில மணி நேரத்தினுள் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போலந்து இராணுவ அதிகாரி இரண்டு முகாம்களுக்கிடையில் பயணம் செய்தபோது அவரது மோட்டார் வாகனங்கள் மீது கெரில்லாக்கள் துப்பாக்கித் தாக்குதல் நடத்திய போதே அவர் உயிரிழந்துள்ளார் என ஈராக்கில் நிலை கொண்டுள்ள அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் சனநாயகம் நிலைபெற வேண்டுமானால் எகிப்து உட்பட அமெரிக்காவின் நேச நாடுகள் சனநாயகத்தையும், சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென புஷ் வாஷிங்டனில் நடத்திய உரையில் கூறியுள்ளார்.

இதனிடையே அடுத்த வருடத்தில் ஈராக்கில் கடமையாற்றவென அனுப்பப்படவுள்ள அமெரிக்க வீரர்களின் அட்டவணையைத் தயாரிக்க பென்டகன் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



கவுத்தமாலா நகர பொலிசாருடன் ஏற்பட்ட சகஜ நிலையையடுத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட நகர சுத்திகரிப்பு ஊழியர்கள் வீதியில் குப்பைகளை எரித்து துப்புரவுப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



இஸ்ரேலிய இராணுவத்தினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட தனது சகோதரியின் இறுதிக் கிரியையின்போது சுதறியழும் பலஸ்தீனப் பெண்மணி.

# சவுதியில் 2 தற்கொலைத் தாக்கு எட்டுப் பொலிசார் படுகாயம்

(ரியாத்)

புனித மக்கள் நகரில் அல்-ஹைதா இயக்கத்தைச் சேர்ந்தவர்ளெனச் சந்தேகிக்கப்படுவோர் மீது அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

தீவிரவாதிகள் இருவர் சவுதி அரேபிய அதிகாரிகளினால் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து வேறு இரண்டு முஸ்லிம் தீவிரவாதிகள் தற்கொலைக் குண்டுகளை வெடிக்கச் செய்து தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இச்சம்பவத்தில் எட்டு சவுதி அரேபிய பொலிசார் படுகாயமடைந்துள்ளனர்.

புனித றம்ழான் மாதத்தின் போது சவுதி அரேபியாவில் பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற வகையில் அமெரிக்காவும், பிரிட்டனும் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பலஸ்தீன சிறுவர்களைப் பாதுகாக்கும் தீர்மானத்தை ஐ.நா. பொதுச்சபை அங்கீகரித்தது

(ஜெருசலேம்)

பலஸ்தீன சிறுவர்களை இஸ்ரேல் பாதுகாக்க வேண்டும் என கோரும தீர்மானம் ஒன்றை ஐ.நா பொதுச் சபை அங்கீகரித்துள்ளது.

இத் தீர்மானத்தை எகிப்து முன் மொழிந்துள்ளது. இதனிடையே இஸ்ரேலிய சிறுவர்களைப பலஸ் தீனம் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் இஸ்ரேல் சமர்ப்பித்த தீர்மானம் அடுத்த வாரம்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.எகிப்திய நகல் தீர்மானம் 88க்கு 04என்ற வாக்கு வித்தியாசத்தில் நிறைவேறியுள்ளது. அமெரிக்கா,இஸ்ரேல் உட்பட நான்கு நாடுகள் அதனை எதிர்த்து வாக்களித்துள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 15 நாடுகள் உட்பட கனடா உள்ளிட்ட 58 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

இத் தீர்மானத்தின் மீது உரையாற்றிய பலஸ்தீன ராஜதந்திரி கடந்த 40 ஆண்டுகளாக இஸ்ரேலிய ஆதிக்கத்தின் கீழ் வாழ்ந்த மேற்குக் கரை கஸா பிரதேச சிறுவர்கள் விசேட பிரிவுற்குள் அடக்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளார்.

# இருபலஸ்தீன இயக்கங்களுக்கு அவுஸ்திரேலிய அரசு தடைவிதிப்பு

(கான்பெரா)

அவுஸ்திரேலிய அரசு முன்னணி பலஸ்தீன தீவிரவாதக் குழுக்களான கமாஸையும், பாகிஸ்தானை மையமாகக் கொண்டு இயங்கும் லக்ஸரி-தொய்பா என்ற அமைப்பையும் தடை செய்துள்ளது.

பாராளுமன்றத்தின் மேல் சபையில் நடந்த விசேட அமர்வுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய இவ்விரு குழுக்களும் தடை செய்யப்பட்ட பயங்கரவாதக் குழுக்கள் என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் நடவடிக்கையைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியம் கமாஸ் இயக்கத்தைத் தடை செய்த வழி முறையை அவுஸ்திரேலியாவும் பின்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 2 கட்ட பாதுகாப்பு உத்தரவாதம் அமெ. வடகொரியாவிற்கு வழங்கும்

(வாஷிங்டன்)

அமெரிக்கா வடகொரியாவிற்கு இரண்டு கட்ட பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்கவுள்ளது.

வடகொரியாவின் 'சந்தேகத்திற்கிடமான அணுவாயுதத்திட்டங்களால் எழுந்த சர்ச்சைகளைத் தீர்க்கும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதே இதன் நோக்கம் என ஜப்பானிய நாளிதழ் ஒன்று கூறுகின்றது. 06தரப்புக்கள் கலந்து கொள்ளும் பேச்சுவார்த்தை நடைபெறும் வேளை பாதுகாப்பை உறுதிப்படுத்துவது சம்பந்தமான ஆவணத்தை சமர்ப்பிப்பதே முதற் கட்டமாகும்.

இரண்டாவது கட்டமாக அணுவாயுதத் திட்டங்கள் தொடர்பான சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு வடகொரியா முக்கிய நடவடிக்கைகளை எடுத்தால் அமெரிக்கா நீண்ட காலப் பாதுகாப்பு உத்தரவாதத்தை அளிக்கும் எனக் கூறப்படுகிறது.



26 வருடங்களுக்கு முன்னால் நாசா விண்வெளி ஆய்வு நிறுவனத்தால் ஞாயிற்றுத் தொகுதிக்கு அனுப்பப்பட்ட வொயேஜர்-1 ஆய்வு கூடம் தனது ஆய்வுகளின் முடிவுகளை வெளியிட 5 வருடங்கள் எடுத்தன. அதன் அமைப்பையொத்த சித்திரத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

# ஒருபோதும் இல்லாத ஆபத்தை நாடு எதிர்நோக்கியுள்ளது

## விழிப்பாக இருக்குமாறு வாஜ்பாய் காவல்துறைக்கு கோரிக்கை

(புதுடில்லி)

எமது நாட்டில் பல பகுதியில் முன்பு ஒரு போதும் இல்லாத ஆபத்துக்கள் தலைதூக்குவதைத் தொடர்ந்து அமைதியையும், உள்நாட்டு பாதுகாப்பையும் பராமரித்திட எப்போதும் விழிப்புடன் இருக்குமாறு பிரதமர் வாஜ்பாய் காவல்துறையினரைக் கேட்டுள்ளார்.

டில்லியில் காவல்துறை தலைவர்களின் ஆண்டு மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் நாட்டின் ஒற்றுமையையும், மக்களின் உரிமைகளையும் பாதுகாப்பதில் காவல்துறையினருக்கு மாபெரும் பொறுப்புள்ளது எனவும், இதைப் புறக் கணித்தால் ஆபத்து ஏற்படலாம் என எச்சரிக்கை விடுத்துள்ளார். உள்நாட்டு, வெளிநாட்டு அச்சுறுத்தல்களை நாடு சமாளிக்கும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

### ம.தி.மு.கழகம் தேர்தலுக்குத் தயார்

(சென்னை)

பொதுத் தேர்தலைச் சந்திக்க ம.தி.மு.க தயாராக உள்ளது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் வை.கோ கூறியுள்ளார்.

கட்சியின் அமைப்பு ரீதியிலான தேர்தல்கள் சுமுகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இவை வரும் டிசம்பருடன் முடிந்துவிடும். தேர்தல் சமயத்தில் தான் கூட்டணி குறித்து முடிவு செய்ய முடியும் தற்போதைக்கு ம.தி.மு.க.கழகம் தேசிய சனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும். பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தி.மு.க.கழகத் தலைவரைச் சந்தித்துப் பேசியது தே.ச.கூட்டணியில் நிலவும் ஆரோக்கிய சூழலைக் காட்டுகிறது என வை.கோ மேலும் கூறியுள்ளார்.



70 முதல் 120 கிலோ நிறையுள்ள மரக்குற்றிகளை ஏந்தி ஓடும் பாரம்பரிய அஞ்சல் ஓட்டப்போட்டியில் பங்குபற்றும் பிறேசில் இளைஞர்கள்.

# திரிபுரா தீவிரவாதிகளை பேச்சுக்கு அழைக்கிறார் அத்வானி

(புதுடில்லி)

வடகிழக்கு மாநிலங்களில் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள அமைப்புக்கள் போலவே திரிபுராவில் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள தீவிரவாத அமைப்புக்கள் வன்முறையைக் கைவிட்டு பேச்சுவார்த்தை நடாத்த முன்வர வேண்டுமென இந்திய துணைப் பிரதமர் அத்வானி கூறியுள்ளார்.

திரிபுரா மாநில ஆளுநருடன் சமீபத்தில் டில்லியில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

# குழந்தையின் படிமுறை வளர்ச்சி

ஒரு குழந்தையின் வளர்ச்சி கீழ்க்கண்ட வகையில் இருக்க வேண்டும். உங்கள் குழந்தையின் வளர்ச்சி இவ்வாறு இருக்கிறதா என்பதை ஒப்பிட்டுப் பாருங்கள்.



### 2 மாதங்கள்
1)சிரிக்கும்
2)பொருளைப்பார்த்து 180 டிகிரி அளவுக்கு கண்களைத் திருப்பும்.

### 3மாதங்கள்
1)தலை நிற்க துவங்கும். 5 மாதத்தில் முழுவதுமாக நிற்கும்.
2)ஓழூ என்று குரல் எழுப்பும்.
3)தலையை தூக்க முயற்சி செய்யும்.

### 4 மாதங்கள்
1)கைகளில் உள்ள பொருளை வாய்க்கு கொண்டு செல்லும்.

### 5மாதங்கள்
1)கவிழ்ந்து படுக்கும்

### 6மாதங்கள்
1)சுவர் ஓரம் உட்கார வைத்தால் நன்கு உட்காரும்.
2)ஒரு கையில் இருந்து மற்றொரு கைக்கு பொருட்களை மாற்றும்.
3)கண்ணாடியில் தன்னுடைய முகத்தைப் பார்த்து சந்தோசப்படும்.

### 7-8மாதங்கள்
1)மார் பால் தவழ்ந்து செல்லும். 8மாதங்கள்
1)தனியாக உட்காரும்.

### 9-10மாதங்கள்.
1)மா,பா, என்ற ஒற்றை சொற்களைச் சொல்லும்.
2)சுண்டு விரல் பக்கமாக கைகளால் பொருட்களை எடுக்கும்.


### 10 மாதங்கள்.
1)மேசை நாற்காலிகளைப் பிடித்து எழுந்து நிற்கும்.
2)கைகளால் டா,டா காட்டும்.
3)பேச்சைப் புரிந்து கொள்ளும்.
4)கால்களும் நகர்ந்து செல்லும்.

### 12 மாதங்கள்.
1)விரல்களால் பொருட்களை எடுக்கும்.
2)அம்மா,அப்பா,தாதா என்று இரண்டு வார்த்தைகளைச் சொல்லும்.
3)தனியாக நின்று இரண்டு அடி எடுத்து வைக்கும்.
4)பொருட்களைக் கேட்டால் தந்துவிடும்.

# 'ஹேம்ஸ்' பூமியுடன் மோதுமா

பூமிக்கு அண்மையாக பிரயாணம் செய்யும் கோள்கள் பற்றி அவ்வப்போது செய்திகள் வெளிவந்த வண்ணமேயுள்ளன. சில கோள்கள் புவிக்கு மிக மிக அண்மையில் பிரயாணம் செய்கின்றன.

2013ம் ஆண்டளவில் புவிக்கு அண்மையில் பயணம் செய்யும் ஒரு கோள் புவியுடன் மோதும் அபாயம் இருப்பதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுபற்றி அவர்கள் தீவிர கவனம் எடுத்துள்ளனர். அதனால் புவிக்கு ஏற்படும் ஆபத்துக்கள் பற்றி மிகவும் கவலையடைந்துள்ளனர்.



முன்பு புவியில் வசித்த டைனோசர் இனங்கள் அழிந்தமைக்கான காரணமும் புவியுடன் கோள்கள் மோதியதாலேயே எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 66 ஆண்டுகளுக்கு முன் புவிக்கு மிக அண்மையில் பயணம் செய்து பின்னர் காணாமல்போன கோளைக் கண்டு பிடித்ததில் விஞ்ஞானிகள் வெற்றி கண்டனர். அரிஸோனா மாநிலத்திலுள்ள லோவல் ஆய்வு மையத்தில் பிரையன் ஸகிப் தலைமையிலான விஞ்ஞானிகள் இதற்கு 'ஹேம்ஸ்' (HERMES) எனப் பெயரிட்டனர். 1937ல் இந்தக் கோள் கண்டுபிடிக்கப்பட்டது. ஜெர்மனிய விஞ்ஞானியான கோரல்ருத்முத் என்பவர் இதனை கண்டுபிடித்தார். 5 நாட்களில் இது மறைந்து விட்டது. எனினும் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டது.

இக்கோள் உள்ள தூரம் சந்திரனுக்கும் பூமிக்கும் உள்ள தூரத்தைப்போல் இருமடங்காகும். இது காணாமல் போனமைபற்றி விஞ்ஞானிகள் வியப்படைகின்றனர். அக்கோளின் கனம் 1க்கும் 2க்கும் இடைப்பட்ட கிலோமீற்றராகும் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இது மீண்டும் ஒரு முறை புவியுடன் மோதுமா என்பதைப்பற்றி விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

# உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் விலங்குகள் பரிபாசையைப் பிரயோகிக்கின்றனவா?....

மனிதனுக்கு மட்டும் தான் மொழி வெளிப்பாடு விலங்குகளுக்கு இவையெல்லாம் குறைவு என்றொரு கருத்து இருந்தது.

இதன் விளைவு அதன் ரகசிய மொழிகளை அறிய முடியாமல் தன் மொழியை அதற்கு ஆராச்சியாளர்கள் பயிற்றுவிக்கத் தொடங்கினார்கள்.

விலங்குகளின் சிந்திக்கும் திறனை அதிகரிக்கச் செய்ய முடியும் என்று விஞ்ஞானிகளில் ஒரு சாரார் நம்பி அவைகளுக்கு புகுத்தினர்.

அப்போது அவர்கள் கண்டு கொண்டது, விலங்குகளால் சத்தங்களையும், அதன் சில குறியீடுகளையும் புரிந்து கொள்ள முடிந்தாலும் அவைகளால் வார்த்தைகளைக் கூட்டிப் பேச முடியாது என்று இன்றைய விஞ்ஞானம் உண்மையை உணர்ந்து இருக்கின்றது. விலங்குகள் நாம் நினைத்ததை விட பல மடங்கு அற்புதமாக தமக்குள் பேசிக் கொள்கின்றன.

அவைகளின் செயற்பாடுகள் ஒவ்வொன்றிற்கும் தனிக் காரணம் உண்டு ' என ஆராச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளார்கள்.

விலங்குகளின் பரிபாஷை மிகவும் பண்பட்டதாய் சிக்கலானதாய் இருப்பதால் அதைக் கண்டறிவது இலகுவானதாக ஆராச்சியாளர்களுக்கு இருக்கவில்லை.

ஒவ்வொரு விலங்கிற்கும் ஒரு பிரத்தியேக பாஷை இருக்கின்றது கடல்வாழ் உயிரினமான சுறாக்கள் தொடர்ந்து ஒரு வித சங்கீத ஒலியை எழுப்பி தங்களது உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. அபாய சூழலை வெளிப்படுத்த வேறு வித ஒலியை எழுப்புகின்றன.

இந்த ஒலிகளைப் புரிந்து கொள்வது விஞ்ஞானிகளுக்கு மிகப் பெரும் சவாலாக அமைந்து இருக்கின்றது.

சில ரகசிய உணர்வுகளை, தங்களின் இருப்பிடங்களை உணர்ந்தும் இந்த சுறாக்களின் ஒலிகள் அல்ராசொனிக் ஒலியலையில் இருக்கின்றது. மனித காதுகளுக்கு இது கேட்காது.

அமெரிக்க விஞ்ஞானி ஜார்ச் வில்லி டொல் பினிகள் மனிதர்களை விட புத்திசாலித்தனமானது எனும் கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

# குளோனிங் குழந்தை

மனிதன் தான் என்றும் சிரஞ்சீவியாக இருப்பது, வயதுக்கு மேல் வளராமல் அப்படியே இளைஞனாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றான். இது சாத்தியமா என்ற ஆய்வு எதிர்கால்த்தில் நடைபெறும்.

ஒருவர் உடலில் இருந்து எடுக்கப்படும் மரபணுவை திருத்தி அமைக்கப்பட்ட பெண்சினை முட்டையுடன் இணைந்து கருக்கட்டச் செய்யும் மருத்துவ தொழிநுட்ப முறை "படியாக்கம்" அல்லது "குளோனிங்" என்று அழைக்கப்படுகின்றது.

இவ்வாறு பிறந்த முதல் உயிரினம் ஆட்டின் பெயர் "டொலி".

இம் முறைமையைப் பயன்படுத்தி மனிதனை உருவாக்கக் கூடாது எனப் பல உலக நாடுகள் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளன.

ஆனால் "ரெலியன்" எனும் ஆன்மீக அமைப்பின் 1997 ஆம் ஆண்டு தோற்றுவித்த குளோனய்ட என்ற அமைப்பு, குளோனிங் மூலம் குழந்தைகளைக் கருக்கட்ட செய்யும் முயற்சியில் இறங்கியது.

இந்த அமைப்பைச் சேர்ந்த, பிரெஞ்சுப் பெண் விஞ்ஞானியான "டிரிகிட் போய்ஸ் செலியர்" தான் இதுவரை ஐந்து குழந்தைகளை உருவாக்கி இருப்பதாகவும், பல குழந்தைகள் இவ்வாண்டில் பிறக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இக் குளோனிங் குழந்தைகள் உண்மையிலேயே பிறந்துள்ளனவா என்பது இதுவரை விஞ்ஞான ரீதியாக உறுதிப் படுத்தப்படவில்லை.

எனினும் இம் மனித குளோனிங் குழந்தைகு இன்றில்லாது விட்டாலும் கிட்டிய எதிர் காலத்தில் சாத்தியப்படும் என்றே மருத்துவ விஞ்ஞான உலகம் எதிர்பார்த்துள்ளது.

இயற்கையாக பிறக்கும் குழந்தைக்குச் தாய் -தந்தை எனப் பெற்றோர் இருப்பார்கள். குளோனிங் குழந்தைக்கு தாய்மட்டுமே இருப்பார். அதாவது யாருடைய மரபணுவில் இருந்து குளோனிங் குழந்தை உருவானதோ அந்த நபர் மட்டுமே பெற்றோர். இது தான் இயற்கையாக பிறக்கும் குழந்தைக்கும் குளோனிங் குழந்தைக்கும் உள்ள வேறுபாடு ஆகும்.

ஆனால் மரபணு ஒன்று போல் இருக்கும் அதனால் ஒரிஜினலும் குளோனிங்கும் ஒன்று போலத் தான் இருக்கும்.

அதே போல் குளோனிங் குழந்தையின் மன நிலை,குணம் என்பன 50 சதவீதம் பெற்றோரினதாகவும், 50 சதவீதம் சுற்றுப்புறத்தைச் சார்ந்தும் அமையும். அத்துடன் அக் குழந்தை ஆரோக்கியமாக வாழ, வாழும் சூழ்நிலை நல்லதாக அமைய வேண்டும்.

எனவே குளோனிங் குழந்தை என்பது மருத்துவ துறையின் ஒரு மகத்தான சாதனையாகும். ஒருவர் உடலில் இருந்து எடுக்கப்பட்ட மரபணு மூலம் உருவாக்கப்பட்ட குளோனிங் குழந்தை அந்த நபரைப் போலவே காட்சி அளிக்கும். எதிர் பாராத விபத்தில் குடும்ப தலைவரோ அல்லது மிக முக்கியமான ஒரு நபரோ உயிரிழந்து விட்டால் அவரது உடலிலிருந்து மரபணுவை எடுத்து பெண்சினை முட்டையுடன் இணைத்து கருக்கட்டல் மூலம் இறந்த நபரைப் போலவே உருவாக்கி விட முடியும். இது விஞ்ஞானம் தந்த மிகப் பெரிய சாதனையாகும்.

# தன்னியக்க ஆய்வு விண்கலம் விஞ்ஞானி டேல் புஷ்மனால் தயாரிப்பு



நாசாட்ரைடன் விண்வெளி ஆய்வு நிலைய விஞ்ஞானி டேல் புஷ்மன் என்பவர் தன்னியக்க ஆய்வு விண்கலம் ஒன்றை தயாரித்துள்ளார். இந்த ஆய்வுக்கலம் 2003ம் ஆண்டு ஜூன் 9ம் திகதி மோஜேவ் பாலைவனத்துக்கு மேலாகப்பறந்து வெற்றிகரமாக ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. இதனை நாசா விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சந்தியாகோவின் பிரதான விண்வெளிப்பயண நிறுவன பொறியியலாளர்களால் வடிவமைக்கப்பட்ட இதன் நீளம் 32அடியாகும். இதன் பெயர் "அல்ட்டனேயர்" எனப்படும். 10 மைல் உயரத்தில் பறக்கும்போது ஓசோன் படைகள் பற்றி ஆய்வை மேற்கொள்ளக்கூடிய இதில் ரேடார் புகைப்படக்கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இது பரீட்சாத்த பறப்பின்போது 750 இறாத்தல் எடையுடன் 32 மணித்தியாலங்கள் ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தது.

மிகவிரைவில் வட துருவ, தென்துருவப் பகுதிகளான அபிவிருத்தியடையாத பிரதேசங்கள், எரிமலைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள நாசா நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இத்திட்டமானது விண்ணில் செல்ல முடியாத பகுதிகளில் மேலும் பல மணித்தியாலங்கள் இது போன்ற விண்கலங்கள் மூலம் மேலும் ஆய்வுகளை நடத்துவதாகும். மனித செயற்பாடுகளை பிரயோசனப்படுத்துவதும் [illegible] இதன் பிரதான நோக்கமாகும்.

## ஈராக்

***மத்திய கிழக்குநாடு***


***தலைநகரம்*** :- பாக்தாத்
***மொத்தப்பரப்பு*** :- 4.38446 ச.கி.மீ
***மக்கள்தொகை*** :- 24.7 மில்லியன்
***தேசியமொழி*** :- அரபி, குர்திஷ்
***பிரதான சமயம்*** :- இஸ்லாம்
***முக்கியவருமானமூலம்*** :-எரிபொருள்
***முக்கிய உற்பத்திகள்*** :- விவசாயம், பார்லி, பேரிச்சம்பழம், திராட்சை, கோதுமை, கட்டடத்தளபாடங்கள், பெற்றோலியப்பொருட்கள், கனிமம், பெற்றோலியம்.
***முக்கிய நகரங்கள்*** :- பாக்தாத்,பாஸ்ரா, மொசூல், கிர்குக்.

உலகில் அறியப்படும் முதல் நாகரிகம் ஈராக்கிலுள்ள யூப்ரடீஸ், டைக்கிரஸ் ஆறுகள் இவை ஆற்றங்கரைகளிலேயே செழித்து வளர்ந்ததாகக் கூறப்படுகின்றது. முற்காலத்தில் இது மொஸப்பெத்தேமியா என்று வழங்கப்பட்டது.

# புற்றுநோய் மருந்தால் நரை முடி நிறம் மாறும்

புற்றுநோய் மருந்தால் நரை முடி நிறம் மாறுவதை டாக்டர்கள் ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளனர். முடி நரைத்து விட்டால் வயதை காட்டிக்கொடுத்து விட்டதேயென்று நிறையப் பேர் கவலைப்படுகின்றார்கள். டை தடவி இளமை வேஷம் போட்டு காலம் தள்ளுகிறார்கள். இப்போது எதிர்பாராத மாமருந்து, நரை முடிக்கு கிடைத்திருக்கிறது. புற்றுநோய் மாத்திரையான கிளிவெக் தான் அந்த மாமருந்து 133 புற்று நோயளிகளுக்கு அந்த மருந்தைக் கொடுத்து ஆய்வு செய்த பிரான்ஸ் டாக்டர்கள், அந்த நோயாளிகளின் நரை முடி நிறம் மாறியதைக் கண்டு வியந்தனர்.

# மாவீரன் மேஜர் பசீலன்



முல்லைத்தீவின் அதன் முத்துக்களில் ஒன்றான பண்டார வன்னியன் படை நடத்தி வெள்ளையர் படைகளின் 60 தலைகளை ஒரே வாள் வீச்சில் வெட்டி வீழ்த்திய இடமாம் கற்பூரப் புல்வெளியை தன்னகத்தே கொண்டது முள்ளியவளை. இது வளம் கொழிக்கும் தேசம் மட்டுமல்ல, பல வரலாற்று சிறப்புமிக்க தேசம். அந்தமண் மடியில் மலர்ந்திருந்த வீரத்தாய் மடியில் தான் அமிர்தலிங்கம் 1961.05.14 அன்று பிறந்தான். இவனுடைய செல்லப் பெயர் "ராசா" ஐந்து பேரைச் சகோதரர்களாகக் கொண்டவன் அமிர்தலிங்கம் அவன் தான் விடுதலை வேங்கை மேஜர் பசீலன் 1983.11.26 அன்றுதமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழீழ தேசியத் தலைவர் வழியில் இணைந்து இந்தியத் தமிழகத்தில் சேலம் மாவட்டத்தில் கும்பிறாப்பிட்டி 3ம் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்று திறமைமிகு வேங்கையாய் பயிற்சி முடித்து வெளியில் வந்த தாய் மகன்.

இவன் பயிற்சிக் காலத்தில் காட்டிய ஆர்வம், திறமைகளைக் கண்ட தமிழீழ தேசியத் தலைவர் மெய்ப்பாது காவலனாக பசீலனை தன்னகத்துடன் வைத்திருந்தார். தமிழகத்துக்கும், தமிழீழத்திற்கும் இடையிலான கடல் போக்குவரத்துக்கு முக்கிய நம்பிக்கைக்குரிய கண்ணாய் காவலனாய் செயற்பட்டான் பசீலன். இவன் தனது ஆரம்பக்கல்வியை முள்ளியவளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடை நிலைக் கல்வியை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் கற்றான். இவன் பள்ளிப் படிப்புடன் புத்தகப் பூச்சியாய் இருக்காது எவற்றையும் வெல்லுபவனாய் ஒரு எழுத்தாளனாக, பல்சுவை நடிகனாக, சிறந்த ஒரு பேச்சாளனாகத் திகழ்ந்தான். நாட்டுக்கூத்து நடிகனாக கொழும்பில் மேடையேறிய காலத்தில் பேராசிரியர் கைலாசபதி அவர்களின் பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெற்றான். இவை மட்டுமல்லாது விளையாட்டில் மிகவும் திறமை மிக்கவனாகக் காணப்பட்டான். குறிப்பாக உதைபந்தாட்டத்தில் பற்பல சாதனைகளைப் படைத்தவன்.

(இவனின் இந்தத் திறமை காரணமாக வன்னிப் பிரதேச மக்கள் மாவீரர் ஆன பின்பும் முள்ளியவளையில் மேஜர் பசீலன் பொது விளையாட்டு மைதானத்தையும் விளையாட்டு அரங்கினையும் அமைத்தனர்.)

1983ல் சிறிலங்கா இனவெறியர்கள் தென் இலங்கையில் வாழ்ந்த தமிழர்களை வெட்டியும், சுட்டும், கொதிக்கும் தார்களுக்குள் தமிழ்க் குழந்தைகளைத் தூக்கி வீசியும், தமிழ்ப் பெண்களை மானபங்கப்படுத்தியும், சீரழித்தார்கள். இதன் காரணமாக பகுத்தறிவு மிக்க அமிர்தலிங்கத்தையும் வீர விடுதலை வேங்கை பசீலனாக உருவாக்கியது.

இவன் பயிற்சிக்காலத்தில் பயிற்சிகளைக் கண்டு சளைத்தவரலாறே இல்லை. இலக்குத் தவறாது நீண்டதூரம் சுடும் ஆற்றல் மிகுந்தவன். புத்திசாதுரியமாய் ஆயுதங்களை இயக்கும் ஆற்றல் கொண்டவன். இவன் செய்யும் எந்தச் செயலும் செயல் திறனுடையதாக எப்படியாவது அமைந்தே தீரும்.

தன் சக தோழர்கள் மத்தியில் சளைக்காதவனாய் பயிற்சி பெற்ற பசீலன் எவரும் மறந்துவிடாதபடி கலை நிகழ்ச்சிகளிலும் முன்னின்று பல நாடகங்களையும் கூத்துக்களையும் நடித்து எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்தவன்.

பயிற்சி முடித்து தமிழீழத் தேசியத் தலைவரின் மெய்ப்பாதுகாவலனாக இருந்து பசீலன் தனது சொந்தமாவட்டத்துக்கு 1984ஆம் ஆண்டு வந்தான். 1984-08-05ஆம் நாள் அன்று விடுதலைப்புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் பொலிஸ்நிலைய வெற்றித்தாக்குதலில் பங்குகொண்டான். அஞ்சாது அடல் ஏறும் வீரன் தொடர்ந்து பல களம் புகுந்தான்.

1985-02-13 இல் கொக்கிளாய் இராணுவ முகாம் மீதான தாக்குதலிலும், 1986 இல் பூநகரி முகாம் மீதான தாக்குதலிலும், மணலாறு முந்திரிய குளம் மீதான தாக்குதலிலும், வவுனியா கண்ணிவெடித் தாக்குதல், நீராவிப்பிட்டித் தாக்குதல் போன்ற தாக்குதல்கள் அக்காலப் பகுதியில் குறிப்பிடக்கூடியதாக அமைந்திருந்தது.

இத்தாக்குதல்களில் மணலாறு முந்திரியக்குளத்தில் சிறிலங்கா இராணுவத்துடன் தொடுக்கப்பட்ட தாக்குதல் தமிழீழ விடுதலைப்புலிகளின் வரலாற்றில் ஓர் முக்கியமான வெற்றித் தாக்குதலாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் 13 ஏ.கே. ரகத் துப்பாக்கிகள் எதுவித இழப்பும் இன்றி விடுதலைப் புலிகளின் வரலாற்றில் முதல் முதலில் கைப்பற்றப்பட்டது. இவனது இந்தத் திறமையான செயற்பாட்டால் அக்காலப் பகுதியில் விடுதலைப்புலிகள் ஆயுத ரீதியாகவும், அரசியல், உளவியல் ரீதியாகவும் இத்தாக்குதல் மூலம் பலம் அடைந்தனர் என்றே கூறலாம். அத்துடன் தேசியத்தலைவரின் பாராட்டும் மிகையாகக் கிடைத்தது. இத்தாக்குதலின் முக்கியத்துவத்தை உணர்த்தியது.

வீரப்பசீலனின் தாக்குதல்கள் இவை மட்டுமல்ல. இன்னும் பல வெற்றித்தாக்குதல்களைத் திட்டமிட்டு வழிநடத்தித் தானும் போர்க்களம் புகுந்தான். கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம், முல்லை, மணலாறு என இராணுவத்துக்கு எதிரான இந்த வீரத் தலைவன் வளர்த்த பசீலனின் தாக்குதல்கள் விரிந்து கிடந்தன.

வன்னிப் பிராந்திய விடுதலைப் புலிகளின் போர்க்கள வரலாற்றில் ஓர் சிறிலங்கா இராணுவ முகாமை முதல் முதலில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பெருமை இந்த வீர மைந்தனையே சாரும். 1985ஆம் ஆண்டு கிளிநொச்சியில் முகாம் அமைத்திருந்த சிறிலங்கா இராணுவத்தினர் தமிழ் இளைஞர்களை அதிகமாகக் கைதுசெய்தும் சுட்டும் அழித்தனர். இந்தத் தமிழ் இளைஞர்களின் அழிப்பினை எவ்வாறு இல்லாமல் செய்யலாம் என எண்ணிய பசீலன் தலைவர் அவர்களின் சிந்தனைக்கு அமைவாக தனது அணியின் திறமையான செயற்பாட்டால் சிறிலங்கா இராணுவ முகாமினை இராணுவம் வெளியே வராதபடி முடக்கி வைத்திருந்தான். இவ்வாறு சிறிலங்கா இராணுவ முகாமைத் தனது அணியின் தாக்குதல் நடவடிக்கையினால் கிளிநொச்சி சிறிலங்கா இராணுவ முகாமினை முடக்கி வைத்திருந்த சம்பவம் விடுதலைப்புலிகளின் போரியல் வரலாற்றில் அக்காலப்பகுதியில் ஓர் திருப்புமுனையான முன்னேற்றகரமான இராணுவ நடவடிக்கை என்றே கூறலாம்.

இது மட்டுமன்றி அமைதி என்னும் போர்வையில் எம்மக்களையும் விடுதலைப்போராட்டத்தையும் அழிக்கவந்த இந்திய இராணுவத்திற்கு எதிராக போர் மூண்டபோது கோப்பாயை நோக்கி முன்னேறிய இந்திய இராணுவத்தை உள்நுழையவிடாது கடும் மோதல் யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் இந்திய இராணுவம் தரையிறங்க முற்பட்டபோது அவர்களை அடுத்தெடுத்து உயிருடனும் பல இராணுவத்தைகைது செய்த தாக்குதலில் முன்நின்ற பெருவீரன்பசீலன்.

இவை மட்டுமன்றி பல போர்க்களங்களில் வெற்றிபூண்டு நின்றவன். பகை குகைக்குள் சென்று பெரு வெற்றியுடன் வந்தவன் பசீலன். இவன் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத் தாக்குதலிலும் கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதலின் போதும் விழுப்புண் அடைந்த வீரமகன் காயப்பட்ட புலி தூங்காது என்பது போல் பசீலன் தூங்கவில்லை. முள்ளியவளை கயட்டைப் பகுதியில் உலங்கு வானூர்தி மூலம் தரையிறக்க முயன்ற சிங்கள இராணுவத்தினரை தனது படையணியில் இருந்த சீலன், மகேந்திரன், யோன்சன் சந்திரன், வாதவூரான், தங்கேஸ், தளபதி கேணல் பால்ராஜ் ஆகியோருடன் நின்று தலைமைதாங்கி எதிர்த்து சமர் புரிந்து தரையிறங்க விடாது தடுத்தான். இவை மட்டும் அன்றி முல்லைத்தீவில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் முன்னேறி மக்களை அச்சுறுத்திய போது 15ஆம் கட்டையில் வைத்து மறித்து மறித்து ஆர்.பி.ஜி. கொண்டு அடித்துத் துரத்தித் துரத்தி அடித்தான் பசீலன்.

இவனது சண்டை மிக வேகமடையத் தொடங்கியது. வெலிஓயா, சிறிபுரம், கனகபுரம், சோமவில், பராக்கிரமபுரம் போன்ற பகுதிகளில் இருந்து தமிழ் மக்கள், பாரம்பரியமாக வாழ்ந்து வந்த கொக்கிளாய், கொக்குத் தொடுவாய் கருணாட்டுக்கேணி போன்ற பகுதியினை புல்டோசர் கொண்டு முன்னேறி ஆக்கிரமிக்க முற்பட்டபோது பல எதிர்த் தாக்குதல்களைச் செய்து பல இழப்புக்களுடன் இராணுவத்தைப்பின் வாங்கச் செய்த பெருவீரன்.

இவ்வாறு இவனது சண்டைக்களங்கள் வெற்றிபெற்று விரிவடைந்து எதிரியைத் திகிலடைய வைத்தது.

பசீலன் என்னும் பெயரைக் கேட்டாலே எதிரிப் படை பதறிப் பாயும் அளவிற்குப் பசீலன் செயல் வீரனாக ஓங்கி நின்றான்.

பசீலன் இரக்க சுபாவம் உள்ளவன். ஆனால் தமிழ் இனம் காலம் காலமாக அழிவுக்குள்ளாகித் தத்தளிக்கும் அவலத்தினை அறிந்தவன். கண்டவன். அதனால் தான் இவனது கண்கள் இரத்தம் போல் சிவப்பாக இருந்தது. இவனது நடை எதிரியை நிலை குலைய வைக்கும் வீராப்பு கொண்டது. தனித்து நின்று எதிரியை நிலை குலையச் செய்த பெரு வீரன் அஞ்சுதல், கெஞ்சுதல் அற்ற வீரம் புதியபுதிய திருப்புமுனையான வெற்றிகளைத் தன் வாழ்வியலிலும் போரியல் வரலாற்றிலும் கண்டவன்.

வரிகளால் வடித்து விட முடியாத தேசப்பற்று உணர்வாளன். தமிழ் தேசியத் தலைவரின் மெய்ப்பாதுகாவலன். தேசத்தலைவர் வழிகாட்டும் படையணி வீரன் தேசத்தலைவன் வீரப் பொக்கிசம். கரந்தடி கெரிலாப் போர் வீரன் பசீலன். பசீலனின் போர் வீரத்தைப் பார்த்தோர் அறிந்தோர் மெய்சிலிர்த்தனர்.

1987ஆம் ஆண்டு அமைதி என பறைசாற்றிக் கொண்டு தமிழீழ தேசமெங்கும் இந்தியப்படையினர் ஆக்கிரமித்து அமைதி என்னும் வேசம் கலைந்து தமிழ் இனத்துக்கு மோசம் செய்யத் தொடங்கிய காலம். அக்காலத்தில் தான் இந்தியப் படைகள் எம் தேசியத் தலைவரை அழிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் குவிக்கப்பட்டிருந்த வேளை யாழ்ப்பாணத்திலிருந்து கண்ணின் கண்மணியாய் கண்ணை இமை காப்பது போல் தமிழீழ தேசியத் தலைவரை பாதுகாப்பாக, பாதுகாவலனாக மிகுந்த துணிச்சலுடனும் பாதுகாப்புடனும் மணலாற்றுக் காட்டுக்குள் அழைத்து வந்து அங்கு தலைவருக்குப் பாதுகாப்பான முகாம் அமைத்துக் கொடுத்து தலைவருக்குப் பாதுகாப்பாக லெப். கேணல் நவத்தையும் தளபதி கேணல் பால்ராஜ்யையும் நியமித்து பசீலன் இந்தியப் படைகள் தலைவர் இருக்கும் இடத்தினை நோக்காதபடி அவர்களின் பார்வையைத் திசை திருப்பும் நோக்குடன் தலைவர் அவர்களின் அனுமதியுடன் மணலாற்றுக் காட்டிலிருந்து சில போராளிகளுடன் முல்லைத் தீவிற்கு வந்த பசீலன் பல இந்திய இராணுவத்தினரை அழித்து பல திசைதிருப்பும் சண்டைகளைச் செய்தான். தண்ணீரூற்று, நீராவிப்பிட்டி 3ம் கட்டை என பல திசைமாற்று சண்டைகளைத் தொடர்ந்தான்.

முல்லைத்தீவில் இருந்து முன்னேறி தண்ணீரூற்றுச் சந்தி வரை வந்த இந்தியப் படைகளைத் தனது அணியுடன் நின்று துரத்தித் துரத்திக் கடும் தாக்குதலைத் தொடுத்ததால் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கமுடியாத இந்தியப் படைகள் பின்வாங்கி முல்லைத்தீவு முகாமுக்குள் புகுந்து விட்டன. இப்படிப்பட்ட தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமே இருந்தது. இதனால் தலைவரை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்னும் ஒரே நோக்குடன் இந்தியப் படைக்கு எதிரான தாக்குதலை தீவிரப்படுத்தி இந்தியப் படைக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தான் பசீலன்.

வழமை போல் 1987.11.8ம் திகதி அன்று முல்லைத் தீவில் இருந்து பெரும் எடுப்பில் முன்னேறிய இந்தியப் படைகளை 3ம் கட்டைப் பகுதியில் வழி மறித்து பசீலன் கடும் போர் தொடுத்தான். பசீலனின் அணியின் உக்கிர தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத இந்தியப் படைகள் பிணமாக ஆங்காங்கே வீழ்ந்தது எஞ்சிய படைகள் உயிர் தப்பினால் போதும் என ஓட்டம் எடுத்தது. பின்வாங்கி தனது முகாமிற்குள் புகுந்து விட்ட இந்தியப் படைகள் அங்கிருந்து சண்டை நடந்த பகுதிக்கு சரமாரியாக எறிகணைகளை வீசின. எறிகணைகளுக்கு அஞ்சாத பசீலன் கொல்லப்பட்ட இராணுவத்தின் ஆயுதங்களை தேடித் தேடிஎடுத்துக் கொண்டிருந்தான். அப்போது எறிகணை ஒன்று பசீலனுக்கு அருகில் வீழ்ந்து வெடித்தபோது எறிகணைத் துண்டு ஒன்று பசீலனின் தலையினைக் காயப்படுத்தியது. அப்போது பசீலனைக் காப்பாற்ற அவனுடன் நின்ற போராளிகள் காப்பாற்ற முயன்ற போதுதான் இந்த மண்ணை முத்தமிடப் போவதை உணர்ந்தவனாகப் பசீலன் சக போராளிகளிடம் தலைவர் கவனம், தலைவரை பாதுகாத்து எம் தேசத்தை மீட்கவேண்டும், எதிரிக்கு சவாலாக சண்டை பிடிக்கவேண்டும் எனக் கூறினான்.

காயப்பட்ட இடத்திலிருந்து ஒட்டுசுட்டான் பகுதி மருத்துவ மனைக்கே கொண்டு செல்ல வேண்டும். கொண்டு செல்லும் வழியில் ஆங்காங்கு இந்திய இராணுவ முகாம் இருந்தன. அதனால் புதுக்குடியிருப்பு வழியின் ஊடாக தளபதி பசீலன் பயன்படுத்தும் பிக்கப் வாகனத்தில் அவனது உயிரைக் காப்பதற்காக விரைந்து சென்ற போது கற்சிலைமடு சந்தியில் அந்த வீரனின் உடலில் இருந்து உயிர் போனது.

பண்டார வன்னியன் படைநடத்தி 60 வெள்ளயப் படைகளின் தலைகளை ஒரே வாள் வீச்சில் வெட்டி வீழ்த்திய கற்பூர புல்வெளியினைத் தன்னகத்தே கொண்ட முள்ளியவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட தளபதி பசீலன் பண்டார வன்னியன் வெள்ளையர்களால் தோற்கடிக்கப்பட்டு நினைவு கற்சிலை உள்ள கற்சிலை மடுவில் மேஜர் பசீலனாக உயிர் நீத்தான். எங்கள் வீரப் புதல்வன் பசீலன் அன்று பண்டார வன்னியன் இன்று தளபதி பசீலன்.

மாவீரன் பசீலன் வளர்த்த போராளிகள் எத்தனை எத்தனையோ. அதிலும் தளபதியானவர்கள் எத்தனை எத்தனையோ. இந்தியப் படைகளுக்கு மண்ணைத் தூவி எம் தேசத்தின் கண்ணாம் எம் தேசியத் தலைவர் அவர்களை யாழ்ப்பாணத்திலிருந்து மணலாற்றுக்கு அழைத்து வந்த விடயம் தெரிந்தவரான பசீலனின் அணியிலிருந்து ஒன்றாகக் களமாடிய தளபதி கேணல் பால்ராஜ் தெரிவிக்கையில்;

இந்திய இராணுவத்துக்கெதிராக கோப்பாயில் இறுக்கமான சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது எங்களிடம் சண்டையை செய்யும் படி உத்தரவைப் பிறப்பித்து விட்டு தளபதி பசீலன் தேசத்தின் உயிர் மூச்சாய் தாயாக, தந்தையாக நம் தேசத்தின் தலைவனை நேசித்த வீரப் புயல் தலைவனை அழைத்து வரும் இரக சியத்தைக் கூட கூடியிருந்த சகபோராளிகளுக்குக் கூறாது இரகசியமாகப் பாதுகாப்புடன் தலைவர் அவர்களைக் காவலனாக கொண்டு வந்த மாவீரன் பசீலன். மாவீரன் மேஜர் பசீலன் எங்களை விட்டுப் போனாலும் அவன் செய்த சாதனைகளையும், வீரச் செயல்களையும், தியாகங்களையும் எம் தேசமோ, எம் தலைவரோ, என்றும் போராளிகளோ, மக்களோ மறந்து விடப்போவதில்லை. அதனால்தான் மாவீரன் மேஜர் பசீலன் என்னும் நாமம் கொண்ட பசீலன் 2000(இரண்டாயிரம்) இன்னும் எதிரியைக் கதிகலங்க வைக்கின்றது. பசீலன் என்னும் வீரத்தளபதியைப் பெற்ற தமிழீழம் அவனுடைய செயல் திறனால் வெற்றிக் குவிப்பால் எவ்வளவு சந்தோசப் பட்டதோ அந்த விழிகள் இன்றும் பசீலன் என்னும் வீரத் தளபதியைத் தேடிய வண்ணமே உள்ளன.

★★★

# 3-வது த. தே. பெருவிளையாட்டு விழா வெகு சிறப்பாக நடாத்த ஏற்பாடு

(அலுவலக செய்தியாயர்)

**தமிழீழ விளையாட்டுத் துறையால் தமிழீழத்தின் எட்டுமாவட்டங்களையும் ஒருங்கிணைத்து வருடாவருடம் நடத்தப்படும் தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழாவின் மூன்றாவது தேசிய பெருவிளையாட்டு விழா எதிர்வரும் மாசி மாதம் இருபதாம் திகதி வெகுசிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

கடந்த காலங்களில் நடைபெற்று வந்த விளையாட்டுக்களை விட இம்முறை நடத்தப்படவுள்ள போட்டியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான கிறிக்கெற் போட்டியை இவ்வருடம் முதன் முதலாக நடத்தவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஆண், பெண்கள் இருபாலாருக்குமான கிளித்தட்டு, கபடி ஆகிய போட்டிகள் நடத்தப்பட உள்ளது. இத்துடன் பெண்களுக்கான கரப்பந்துப் போட்டியும் இம்முறை நடத்தப்படஉள்ளது.

இவ்வாறு நடத்தப்படும் போட்டிகளில் மாவட்ட ரீதியாக ஒவ்வொரு அணிகள் மாத்திரம் பங்குபெற்றலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டியில் கேணல் சங்கர் நினைவான கிரிக்கெட் போட்டிக்கு தமிழீழ வைப்பகமும் லெப் .கேணல் விக்ரர் நினைவான உதைபந்தாட்டப் போட்டிக்கு தமிழர் புனர் வாழ்வுக்கழகமும், மேஜர் அல்பேட் நினைவான அண்களுக்கான கரபந்தாட்ட போட்டிக்கு நிமலன் புகைபட கலையகமும் மேஜர் சோதியா நினைவான வலை பந்தாட்டப் போட்டிக்கு ஈழநாதம் பத்திரிகை நிறுவனமும் அனுசரனை வழங்குகின்றது.

அத்துடன் லெப். கேணல் புலேந்தி அம்மான் நினைவான ஆண்களுக்கான கிளித்தட்டு, மேஜர் அன்பரசி நினைவான பெண்களுக்கான கிளித்தட்டு, லெப் கேணல் சந்திரன் நினைவான ஆண்களுக்கான கபடி, கப்டன் திலகா நினைவான பெண்களுக்கான கபடி, லெப்.சதா நினைவான பெண்களுக்கான கரபந்து ஆகிய ஐந்து போட்டிகளுக்கான வெற்றிக் கேடயங்களுக்கு அனுசரனை வழங்கி வருடா வருடம் தமிழீழ தேசிய பெருவிளையாட்டு நிகழ்வினை சிறப்பிக்க விரும்புவர்கள் தமிழீழ விளையாட்டுத் துறை நடுவப் பணியகத்துடன் நேரடியாக அல்லது 021-2225715 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் விளையாட்டுத் துறையினர் கேட்டுள்ளனர்.

இதே வேளை மேற்படி மூன்றாவது தேசிய பெருவிளையாட்டு விழாவில் கலந்து கொள்ளும் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த அணிகளை சிறந்த முறையில் தயார்ப்படுத்திக் கொள்ளுமாறும் விளையாட்டுத் துறையினர் வேண்டுகின்றனர். (லோ)

## மழையால் போக்குவரத்துப் பாதிப்பு

வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் கடந்த இருநாட்களாக மழை பெய்து வருகிறது.

சில மாவட்டங்களில் மழை காரணமாக போக்குவரத்துக்கள் பாதிப்படைந்தன.

## இலங்கையின் அரசியல் நிலைமையை உன்னிப்பாக அவதானிக்கின்றோம்

### ஜப்பான் அரசு அறிவிப்பு

(டோக்கியோ)

இலங்கையில் நிலவும் அரசியல் நிலைமை பற்றி ஜப்பானிய அரசாங்கம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது. சனநாயக விதி முறைகளுக்கிணங்க சகல கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென ஜப்பான் கேட்டுக் கொண்டுள்ளது.

சந்திரிகா குமாரதுங்க ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட சகல கட்சிகளும் சேர்ந்து தற் போதைய நிலைமையைத் தீர்த்து சமாதான திட்டத்தை வழி நடத்த வேண்டுமென ஜப்பான் அரசு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையின் சமாதானத் திட்டத்தில் ஜப்பான் கூடிய அக்கறையுடன் செயற்பட்டு வருவதோடு இலங்கையைக் கட்டியெழுப்புவதில் நிதியுதவியை அது வழங்கி வருகிறது தெரிந்ததே.

## பாராளு. பெரும்பான்மையைப் பெற்று அரசாங்கத்தை அமைப்போம்

### பொ. ஐ. முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதில் வெற்றி பெற்றிருப்பதாகவும், இதன் மூலம் புதிய அரசாங்கம் ஒன்றைத் தோற்றுவிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் பொதுசன ஐக்கிய முன்னணி அறிவித்துள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையை ஏற்று புதிய அரசமைக்க பல ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வந்துள்ளனர் என்று பொ. ஐ. முன்னணி மேலும் தெரிவித்துள்ளது.

## மயிலிட்டி வைத்தியசாலையை இயக்க படையினர் தொடர்ந்து அனுமதிமறுப்பு

### நோயாளர் பெரும் அவதி

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டிப்பகுதி இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயத்துள் முடக்கி வைக்கப்பட்டள்ள காச நோய் வைத்திய சாலையை இயக்குவதற்குரிய அனுமதியைப் படையினர் மறுத்து வருவதால் காச நோயாளர்கள் பெரும் அவதிப்பட்டு வருகின்றனர்.

மேற்படிப் பகுதியை இராணுவம் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து அங்கிருந்து இடம்பெயர்ந்து கோப்பாயில் இயங்கி வந்த இக்காச நோயாளர் பிரிவு தொடர்பாக கோப்பாய் பகுதிமக்கள் காட்டிய எதிர்ப்பைத் தொடர்ந்து சங்கானை வைத்திய சாலைக்கு இது மாற்றப்பட்டாலும் அங்கும் அதற்கு எதிர்ப்பு இருந்ததைத் தொடர்ந்து இது தற்போது மந்திகை வைத்தியசாலையில் இயங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் அங்கும் அதற்கு அதிருப்தி தெரிவிக்கப்படுவதை தொடர்ந்து நிரந்தரமான ஒரு வைத்தியசாலை இன்றி இக் காச நோயாளர்கள் பெரும் அவதியை எதிர் கொண்டுள்ளனர். (33)

## அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம் சொந்த இடத்தில் இயங்க படையினர் அனுமதி மறுப்பு

அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயத்தை தன் சொந்த இடத்தில் முழுமையாக இயங்குவதற்கான அனுமதியை அப்பாடசாலை நிர்வாகம் படையினரிடம் கோரியுள்ளது. இப்பகுதி பாதுகாப்பு வலயத்துள் இருப்பதால் ஆரம்பப் பிரிவை மட்டும் அதன் சொந்த இடத்தில் இயங்குவதற்குரிய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின் அனுமதி படையினரால் வழங்கப்பட்டிருந்தாலும் அங்கு செல்லும் ஆசிரியர் மீதும் மாணவர்கள் மீதும் பல கெடுபிடிகளை படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இட நெருக்கடியைக் கருத்தில் கொண்டு ஏனைய கனிஷ்ட, உயர்தர வகுப்பு அதன் சொந்த இடத்தில் இயங்குவதற்கு படையினரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. (33)

## யாழ். குடாநாட்டு பொலிசாருக்கு ம. உரிமை பற்றி விழிப்புணர்வுக்கல்வி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் கடமையாற்றும் பொலிசாருக்கும் மனித உரிமை விழிப்புணர்வுக் கல்வியை புகட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டார தகவல்கள் தெரிவிக் கின்றன.

யாழ். குடா நாட்டில் நடைபெறும் மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்களில் கணிசமான அளவு குற்றச்சாட்டுக்கள் பொலிசார் மீதும் சுமத்தப்படுவதைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வலிகாமம், தீவகம், தென்மராட்சி,வடமராட்சிப் பிரதேசங்களில் நடைபெற்று வரும் இவ்விழிப்புணர்வு நடவடிக்கைகளின் போது மனித உரிமைகள் பற்றிய அடிப்படை விளக்கங்களும் மீறப்படுவதற்கு உரிய தண்டனைகள் தொடர்பாகவும் அறிவுறுத்தப்பட்டு வருகிறது. (33)


## இரண்டாண்டு நினைவலைகளில்...



அமரர் கோமுகி பிரபாகரன்

(கொக்குளாய் அ.த.க. பாடசாலை ஆசிரியை)

மண்ணகத்தில் 29-06-1975
விண்ணகத்தில் 01-11-2001

திதி 08-11-2003

ஆண்டுகள் இரண்டு பறந்திடினும் ஆறாது எம் துயரம்
கூடியிருப்போம் என எண்ணியிருக்க குறையிலே எம்மை
விட்டுப் பிரிந்தாயே ஜினா! பிரிந்தாலும் - உன்
அன்பும் பாசமும் எங்கள் நெஞ்சைவிட்டு நீங்காது...

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

7ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு. (3729)

குடும்பத்தினர்.

## 4ஆம் ஆண்டு நினைவில்... 18ஆம் ஆண்டு நினைவில்...





லெப். ஜனார்த்தனன்

(பாலசிங்கம் மயூரன்)

அச்சுவேலி தெற்கு உலவிற்குள
பிள்ளையார் கோவிலடி அச்சுவேலி.

ஜனனம் 02-02-1980
வீரச்சாவு 08-11-1999

என்றும் எங்கள் பாசத்தின் ஜனார்த்தனனே
நீ எம்மை தவிக்க விட்டுச் சென்றீரே
தானைத் தலைவனின் வழியிலே தமிழீழ தாகம்
தீர்க்கவெண்டு வீறு கொண்டு எழுந்தீரே.
உன் செயல் யாவும் எம்மை விட்டகலாதுள்ளது.
நீர் படைத்த சாதனைகள் யாவும் சோதனைகளாகவும்

மூத்த தளபதி மேஜர் அல்பேட்

(கந்தையா நிமதநிதி)

அச்சுவேலி
(புலிகள் அமைப்பின்
முதலாவது மேஜர்)

வீரச்சாவு 21-12-1985

சோதனைகள் யாவும் வேதனைகளாகவும் இன்றும் உள்ளது.
உன் தாயக மண் மீட்புக்காய் ஓயாத அலை மூன்றிலே
உன் அன்னை மண்ணை முத்தமிட்டாயே
உன் துயர் கேட்டதும் பதையாய் பதை பதைத்தோமே
உன்னோடு வீர காவியமான அனைத்து மாவீரர்களையும்
இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தகவல்:
அண்ணா பா. பாலமுரளி
பாண்டியன் சுவையூற்று, பளை. (3728)

உன் துயரால் பிரிவுறும்

குடும்பத்தினர், அப்பா, அம்மா,
அண்ணாமார், தங்கை, போராளியான தம்பி
1ஆம் வட்டாரம் முள்ளியவளை.



### சிந்தனைக்கு

மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்று கின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 08-11-2003

## தம்மைத்தாமே.....!

சனாதிபதி சந்திரிகாவின் அமைச்சுப் பறிப்புக்கள் மற்றும் அது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளைப் பாதிப்பிற்கு உள்ளாக்க மாட்டாது என ஒரு தரப்பினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். இதில் சிலர் பாதிப்பிற்குள்ளாகக் கூடாது என ஒரு வகையில் அழுத்தத்தைப் பிரயோகிக்கும் வகையில் பேசியும் உள்ளனர்.

சனாதிபதி சந்திரிகாவும்,அவரது ஆலோசகர்கள், கட்சியினரும் இதனை உறுதிப்படுத்துமாப்போன்றே பேசி வருகின்றனர். அதாவது யுத்தநிறுத்தம் தொடரும் எனவும்,சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு அரசாங்கத் தரப்புத் தயாராக உள்ளது என்பதும் சனாதிபதி சந்திரிகா தரப்புப் பேச்சாக உள்ளது.

ஆனால், நடைமுறையில் இது எத்தனை தூரம் சாத்தியமானது என்பது கேள்விக்குரியதொன்றே ஆகும். ஏனெனில்,சனாதிபதி சந்திரிகாவிற்கும் பிரதமர் ரணிலுக்கும் இடையிலான முரண்பாட்டிற்கு அதிகாரப் போட்டி காரணமாக இருக்கலாம். ஆனால், இவ் அதிகாரப் போட்டியில் வெற்றி பெறுவதற்குச் சமாதான முயற்சிகளையே சனாதிபதி பேரத்திற்கு உள்ளாகியுள்ளார்.

சனாதிபதி சந்திரிகா, மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்பதற்குக் கூறிய, காரணமானது 'தேசிய பாதுகாப்பு' என்பதே ஆகும். இது குறித்து சனாதிபதி சந்திரிகா தரப்பு வேறு விளக்கம் எதையும் கூறாதுவிட்டாலும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என அவர் கூறும் விடயங்கள் சிலவற்றை எம்மால் அடையாளப்படுத்த முடியும். ஏனெனில், கடந்த காலத்தில் இவற்றையே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் எனக் குற்றம் சாட்டிய விடயங்களாக இருந்தன.

முதலாவதாகத் திருகோணமலைத் துறைமுகத்தையும், நகரத்தையும் சூழ விடுதலைப்புலிகள் புதிய முகாம்களை அமைப்பதாகவும் இதனால் திருமலைத்துறைமுகத்திற்கும் நகருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் கூறி வந்ததினைச் சுட்டிக்காட்ட முடியும். அடுத்ததாக அண்மைக் காலத்தில் விடுதலைப்புலிகளின் கப்பல் ஒன்று தப்பிச் சென்றது என்ற ரீதியில் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது எனவும் அவரது குற்றச்சாட்டுக்கள் அமைவதற்கு வாய்ப்புண்டு.

இவ்விடயங்களில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மட்டுமல்ல,போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவும் சரிவரச் செயற்படவில்லை என்பது சனாதிபதி சந்திரிகாவின் குற்றச்சாட்டு ஆகும். இதன் காரணமாகவே யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சன் அவர்களையும் நோர்வே அரசு திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

சனாதிபதி சந்திரிகாவின் இத்தகைய நடவடிக்கையானது ஏற்கனவே யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு மாறானது. யுத்தநிறுத்த உடன்பாட்டை கேள்விக்குரியதாக்கும் ஒரு நடவடிக்கை எனப் பிரஸ்தாபிக்கப்பட்டது. இது குறித்து நோர்வே அரச தரப்பினர் கூட சனாதிபதியின் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளுக்கு இடையூறானதாக இருக்கும் என அபிப்பிராயம் வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் சனாதிபதியின் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளில் பாதிப்பைச் செலுத்தாது என்றோ சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என்றோ எவ்வாறு எதிர்பார்க்க முடியும். விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராக உள்ளது எனக் கூறிக்கொள்ளலாம். ஆனால், யுத்தநிறுத்த உடன்பாடு புலிகளுக்குச் சாதகமாக அமைந்துள்ளது எனக் கூறியே சனாதிபதி சந்திரிகா இவ் உடன்பாட்டை ஆரம்பம் முதலே எதிர்த்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆகையினால், இவ் யுத்த உடன்பாட்டையே சமயமாகக் கொண்டு நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளில் எவ்வாறு முன்னேற்றம் காண முடியும்? அதுமட்டுமல்ல, தற்பொழுது விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான நகல் திட்டமானது சனாதிபதி தரப்பால் கடும் விமர்சனத்திற்கு உள்ளாக்கப் பட்டுள்ளது. இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடரும் எனவும், முன்னேற்றம் காணும் எனவும் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

இதேவேளை, சனாதிபதி சந்திரிகாவினால் உருவாக்கப்பட்டுள்ள முட்டுக்கட்டையை மீறிச் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதானது சுலபமானதொரு காரியமாக இருக்கமாட்டாது. அதிலும் முப்படைத் தளபதிகளையும் தனது அதிகாரத்தின் கீழ் சனாதிபதி சந்திரிகா கொண்டிருக்கையில் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காணப்பட நம்பிக்கை வெளியிடுவதும்,நம்புவதும் ஒரு வகையில் தம்மைத்தாமே ஏமாற்றிக்கொள்வதாகவே இருக்க முடியும். அவ்வாறு இல்லாது சனாதிபதி மீது நம்பிக்கை கொண்டவர்களாக அவர்கள் இருப்பின் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்பாக அண்மையில் அவரால் போடப்பட்டுள்ள முட்டுக்கட்டைகளை அகற்ற முற்படுதல் வேண்டும். அவ்வாறு இல்லாது சமாதான முயற்சிகள் முன்னேற்றம் காணும் எனக் கூறுவது தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்வதற்கான அல்லது உலகை ஏமாற்றுவதற்கானதொரு நடவடிக்கையாகவே இருக்க முடியும்.

## புலிகளுடன்பேசி பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டு அமெரிக்கா இதில் உறுதியாக உள்ளது

### அமெரிக்க நிலையத்தின் பணிப்பாளர்

(வாஷிங்டன்)

இலங்கை சனாதிபதியின் அண்மை தீர்மானங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான திட்ட பேச்சுவார்த்தையில் எதிர் விளைவை ஏற்படுத்துமென அமெரிக்காவின் சர்வதேச கல்வி மற்றும் தந்திரோபாய தமிழீழ நிலையத்தின் தென்னாசியப் பிராந்திய இயக்குனரும் சிறிலங்காவிற்கான முன்னாள் அமெரிக்க தூதுவருமான ரெறெசிற்ராசபர் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

இலங்கைப் பிரதமரும் சனாதிபதியும் சேர்ந்து சமாதானத்திற்கு ஆதரவாக செயற்படுவதன் மூலம் இலங்கையில் சனநாயக அமைப்பை பாதுகாக்க வேண்டும்.

சமாதான திட்டம் சம்மந்தமாக இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி 25 வருட இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

அண்மையில் நாங்கள் இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம். இலங்கை ஒரு சனநாயக நாடு பல கட்சிகள் உள்ளிட்ட சனநாயக நாடு பல கட்சிகளைச் சேர்ந்த பொது மக்கள் பொது விடயத்திற்காக ஒன்றாகக் கூடி ஈடுபடுகிறார்கள். தீர்மானங்களும் நடவடிக்கைகளும் நல்லதாக அமையுமென நாங்கள் நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நீதிச்சேவை ஊழியர்கள் சிறிலங்கா அரசிற்கு எச்சரிக்கை

(கொழும்பு)

மீண்டும் ஒருமுறை பிரதம நீதியரசுக்கு எதிராக குற்றவியல் பிரேரணை கொண்டு வரப்பட்டால் தொழிற்சேவையிலுள்ள நீதிச் சேவை ஊழியர்கள் போராட்டம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை நீதிச் சேவையில் முதன் முறையாக இவ்வாறான ஒரு குற்றவியல் பிரேரணை கொண்டு வரப்பட்டது வரவேற்கத் தக்க விடயம் அல்ல என்றும் கூறப்படுகின்றது.

அரசின் தலையீடுகள் அதிகமாக நீதிச் சேவையில் காணப்படுகின்றன. அவ்வாறான தலையீடுகள் அரசியல் அதிகாரத்தைப் பாதிக்கும் செயலாகும்.

அரசியலில் இவ்வாறு கொண்டுவரப்படுகின்ற குற்றவியல் பிரேரணை நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல்களாகவே கொள்ளப்படும். என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மீனவருக்கு பாஸ் வழங்கும் பணி மீண்டும் கடற்படை பொறுப்பேற்பு

### -பருத்தித்துறை மீனவர் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை முனைப் பகுதியில் கடற்றொழிலுக்கு செல்வோருக்கான பாஸ் வழங்கும் நடவடிக்கைகளில் மீண்டும் கடற்படையினர் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். அண்மையில் பாஸ் வழங்கும் நடைமுறையில் இப்பகுதி மீனவர்களுக்கும் கடற்படையினருக்கும் இடையே ஏற்பட்ட முறுகல் மற்றும் கைகலப்பினைத் தொடர்ந்து இந் நடவடிக்கையில் பொலிசாரே ஈடுபட்டு வந்தனர். ஆனால் மீண்டும் கடந்த இரு நாட்களாக இந் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளதால் இப்பகுதி மீனவர் தரப்பு இது குறித்து தன் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளது. (33)

### - போர்நிறுத்த உடன்பாட்டை -

## ரத்துச்செய்யக் கோரும் வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்பாட்டை ரத்துச் செய்யக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் விசாரணை எதிர்வரும் டிசம்பர் 11ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. நேற்று முன்தினம் இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதும், மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சமுகமளிக்காமையால், இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணி, சிஹல உறுமய மற்றும் சிங்கள மகா சங்கம் என்பன இந்த மனுவைதாக்கல் செய்துள்ளன.

இதில் பிரதமர், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர், மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள் ஆகியோர் பிரதிவாதிகளோடு குறிப்பிடப்பட்டுள்ளார். (32)

## சந்திரிகா-வாஜ்பாய் உரையாடல்

(புதுடில்லி)

சனாதிபதி சந்திரிகா இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் தொலைபேசிமூலம் நேற்று முன்தினம் உரையாடியுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தகவல் தருகையில்; சமீப நாட்களில் இலங்கை அரசியலில் நாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக இந்தியப் பிரதமருக்கு விளக்கமளிக்க சனாதிபதி இத்தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார் என கூறியுள்ளார்.

## இங்கிலாந்து கிரிக்கெட் அணி திட்டமிட்டபடி இல.க்கு வரும்

### இங்.கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவிப்பு

(லண்டன்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணி திட்டமிட்டபடி இலங்கைக்கான கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கூறியுள்ளது.

இலங்கையில் தோன்றியுள்ள அரசியல் குழப்ப நிலைக்கு மத்தியில் நாடு முழுவதும் அவசரகால நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ள நிலையிலும் இந்த சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளுமாறு இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கு இங்கிலாந்து வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

இலங்கையில் தோன்றியுள்ள அரசியல் குழப்ப நிலைகுறித்து எதுவித கருத்தும் கூற மறுத்த இங்கிலாந்து வெளிவிவகார அமைச்சு இலங்கைக்கான கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை இரத்துச் செய்வதற்கு எதுவித காரணமும் இல்லை எனவும் கூறியுள்ளது.

அதே நேரம் இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் டேவிட் மோர்கன் கடந்த புதன் கிழமை சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தலைவர் திலங்க சுமதிபாலவுடன் தொடர்பு கொண்டு திட்டமிட்டபடி இங்கிலாந்து கிரிக்கெட் அணி இலங்கைக்கு விஜயம் செய்யுமெனக் கூறியுள்ளார்.

## கிரிக்கெட் குடும்பத்தில் சீனா இணைவு

(பீஜிங்)

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கும் தகுதியை சீன அணி பெற்றுள்ளது.

நவம்பர் மாத இறுதியில் கிரிக்கெட் குடும்பத்தில் சீனா இணைந்து கொள்ளுமென ஆசிய கிரிக்கெட் சம்மேளன பிரதம நிறைவேற்று அதிகாரி அஷரபுலஹக் கூறியுள்ளார்.

கிரிக்கெட் போட்டிகளில் தற்போது ஆர்வம் காட்டிவரும் சீனர்கள் ஆசியாவின் கிரிக்கெட் பட்டியலில் 21வது நாடாக பிரவேசிக்கின்றனர்.

கடந்த வாரம் நடைபெற்று முடிந்த ஹொங்கொங் சிக்ஸர் தொடரின் போது சீன கிரிக்கெட் அதிகாரிகளை ஆசிய கிரிக்கெட் சம்மேளன பிரதம நிறைவேற்றதிகாரி அஷ்ரபுல் சந்தித்துக் கலந்துரையாடிய போதே சீனாவுக்கு கிரிக்கெட் அந்தஸ்து வழங்கப்படுவதென்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



# ...க்கில் அமெரிக்க உலங்கு வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டதில் ஆறு படையினர் பலி

ஈராக் ரிக்றிற் பகுதியில் அமெரிக்க உலங்கு வானூர்தி யொன்று சுட்டு வீழ்த்தப்பட்டதில் ஆறு அமெரிக்கப் படையினர் பலியாகினர்.நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தின் போது வீழ்ந்து நொருங்கிய பிளக்கவாக் ரக உலங்குவானூர்தி ஆர்.பி.ஜி மூலம் தாக்கப்பட்டிருக்கலாம் என அமெரிக்கப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆறு படையினரே இவ் வுலங்கு வானூர்தியில் இருந்ததாகவும் ஆறு பேரும் பலியாகி விட்ட தாகவும் இப்பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவப் பிரிவின் பேச்சாளர் தெரிவித்தார்.

உலங்குவானூர்தி வீழ்ந்த இடத்தில் வெண்ணிறப் புகை எழுந்துகொண்டிருந்ததாகவும் மூன்றுக்கு மேற்பட்ட உலங்கு வானூர்திகள் தேடுதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



# பத்தாண்டு நிறைவில் பூநகரி பெருவெற்றி விழா

விடுதலைப் புலிகளின் தவளைப் பாய்ச்சல் இராணுவ நடவடிக்கை பத்தாம் ஆண்டு வெற்றி விழா ஏற்பாடுகள் பூநகரியில் நடைபெற்று வருகின்றன.

பூநகரி கடற்புலிகளின் அரசியல் துறையினரின் அனுசரணையுடன் பூநகரி பிரதேச மக்களால் தெரிவு செய்யப் பெற்ற விழாச் செயற்குழுவினர் இவ் ஏற்பாடுகளில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.பூநகரிப் பிரதேசத்திலுள்ள அரச,அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், விளையாட்டுக்கழகங்கள் ,பொது மக்கள் போன்றோரின் ஒத்துழைப்புடன் விழாச் செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இவ்வெற்றி விழாவை முன்னிட்டு பூநகரிக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நேற்று பொது அறிவுப் போட்டி முற்பகல் 10.00மணிக்கு நடை பெற்றது. தரம் 9தொடக்கம் தரம் 13வரையிலான வகுப்புக்களைச் சேர்ந்த பதின்னான்கு பாடசாலை களின் எண்ணூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் போட்டியில் தோற்றினர். இப்போட்டி கிளி. பூநகரி ம.வி, கிளி.பூநகரி நல்லூர் ம.வி, கிளி.வேராவில் இ.ம.வி, கிளி.முழங்காவில் ம.வி, கிளி. ஜெயபுரம் அதக. பாடசாலை போன்ற தேர்வு நிலையங்களில் நடைபெற்றது.விளையாட்டுப் போட்டிகள் உதை பந்தாட்டம், வலைப் பந் தாட்டம், மரதன்ஓட்டம், (இருபாலா ருக்கும்)என்பன நடைபெற உள்ளன.

உதை பந்தாட்டம், வலைப் பந்தாட்டம் இன்று தொடக்கம் பூநகரி தம்பிராய் அண்ணா விளையாட்டுக் கழகத் திடலில் மு.பகல் 8.00மணிக்குத் தொடங்கவுள்ளன.

இறுதி நாளான 11ம் திகதி செவ்வாய் அன்று காலை 5.30மணிக்கு ஆண்களுக்கான மரதன் ஓட்டம் கிளிநொச்சி றொட்டிக்கோ மைதானத்திலிருந்து பூநகரி வாடியடி வரையும் பெண்களுக்கான மரதன் ஓட்டம் சாமிப்புலவு திலீபன் மருத்துவமனையிலிருந்து பூநகரி வாடியடி வரையும் நடைபெறவுள்ளது.

உதைபந்தாட்டம் வலைப்பந்தாட்டம் என்பவற்றுக்கான இறுதிப் போட்டிகள் அன்றைய நாள் மு.பகல்10.00மணிக்கு மேற்குறிப்பிட்ட திடலில் இடம் பெறவுள்ளன.

இறுதி நாள் இரவுக் கலை நிகழ்வாக மன்னார் மாவட்ட கடற்புலிகளின் கலைஞர்களின் சின்னவன் இசைக் குழுவினரின் எழுச்சிப் பாடல்களும் சிறப்பு நிகழ்வாக இடம் பெறும். அத்துடன் "மக்கள் தீர்ப்பு "என்னும் நாடகமும் "வன்னியின் வாசல் திறந்த வரலாற்றுப் போருக்காய்"என்ற கவியரங்கும் நிரந்தரத் தீர்விற்கான வழிகளில் சிறந்தது போரா? அமைதி முயற்சியா? என்ற பட்டிமன்றமும் இவற்றுடன் வணக்க நடனம், கரகாட்டம் போன்றனவும் இடம்பெறவுள்ளன. தொடரான போர் முழக்கம் தொடர்ந்த வேளை எதிரியின் டாங்கிகளைக் கைப்பற்றியும் எரித்தும் வரலாற்று போர்ச்சாதனை புரிந்த நிகழ்விடத்திலிருந்து இசையணி வகுப்புடன் ஊர்வலம் மாவீரரின் பொது திருவுருவப் படம் தாங்கி பி.பகல் 3.00 மணிக்கு பூநகரி சங்குப்பிட்டிச் சாலை யில் பூநகரி- ப.தெ.வள. அ.கூ.சங்கத்திற்கு அண்மையில் ஊர்வலம் தொடங்கவுள்ளது.

இவ் ஊர்வலம் பூநகரி வாடியடித்திடலை வந்தடைந்ததும் தேசியக் கொடி ஏற்றுதலுடன் வெற்றிவிழா நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (34)

# சனாதிபதியின் அதிகாரங்களை அரசு ஏற்காமையே நெருக்கடிக்குக் காரணம்!

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி

அரசியல் யாப்பிற்கமைய சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும்பொறுப்புக்களையும் அரசு ஏற்றுக்கொள்ளாமையே தற்போதைய நெருக்கடிக்கான காரணம் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கூறியுள்ளது.

பிரதமருக்குக் கிடைத்துள்ள மக்களின் ஆணையான வாக்குகள் சனாதிபதிக்கு வழங்கப்பட்டதைவிடக் கூடுதலானதெனச் சிலா கூறுவது ஆதாரமற்ற கருத்தாகும் என கம்யூனிஸ்ட் கட்சியின் செய்திக் குறிப்புக் கூறுகின்றது. அரசியல் யாப்பின் மூலம் தனக்கு வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்ட அதிகாரங்களையும், பொறுப்புக்களையும் நிலைநாட்டுவது சனாதிபதிக்கு அரசியல் யாப்பு மூலமான கடமையாகுமென அக் குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் சனாதிபதி மக்கள் ஆணை மூலம் வழங்கப்பட்டிருக்கும் பொறுப்பையும் கொண்டுள்ளார். இதேவேளை அரசியல் யாப்பு மூலம் சனாதிபதி எடுத்துள்ள தீர்மானம் சட்டபூர்வமானதும், சரியானதும், நியாயமானதென அக் கட்சி மேலும் கூறியுள்ளது. அரசியல் அமைப்பு, நீதித்துறை அமைச்சு ஆகியவற்றிற்கு இடையிலான முரண்பாடுகள் அரசியல் யாப்பு அமைச்சு மற்றும் நிறைவேற்று அதிகார அமைப்பு என்பவற்றிற்கு இடையிலான பிணக்குகள் ஆகியவற்றை முன்வைத்து சனாதிபதி இத் தீர்மானத்தை எடுக்கவேண்டியதாயிற்று. கம்யூனிஸ்ட் கட்சி இந் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு 03 மாற்று யோசனைகளையும் முன்வைத்துள்ளது.

ஒன்று சகவாழ்வு ஆட்சியை முன்னெடுத்துச் செல்வது, இரண்டாவது பாராளுமன்றத்தில் அதிகார சமத்துவ மாற்றம் மூலம் புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது, மூன்றாவதாகப் பொதுத் தேர்தலை நடத்துவது என்பன அவர்களது யோசனையாகும். தற்போதைய அரசியல் யாப்பு தேர்தல் முறைகளுக்கு அமையப் பொதுத் தேர்தலின் பின்னர் நிரந்தரத் தீர்வு ஒன்று காண முடியாதென அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

# 'நாட்டில்' நெருக்கடி நிலவும்போதும் எமது பணிகள் தொடர்கின்றன

## போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுப்பேச்சாளர்

நாட்டில் அரசியல் நெருக்கடி நிலவுகின்ற போதும், தமது பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின்பேச்சாளர் எக்னஸ் கூறியுள்ளார். நாட்டில் நெருக்கடி நிலை தமதுபணிகளுக்குப் பாதிப்பு எதனையும் ஏற்படுத்தப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

## வினாத்தாள் பொதிகள்

தரம் 9 இற்கான மாகாண மட்டப் பொதுப் பரீட்சைக்கான வினாத்தாள் பொதிகளை வரும் 10 ஆம் திகதி காலை 10 மணிக்கு மாங்குளம் மகாவித்தியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு துணுக்காய் வலயக் கல்விப் பணிமனையினர் அறிவித்துள்ளனர்.

## அமெ...

மூத்த அமைச்சர்களை தயாரிக்கும்படி பிரதம மந்திரி அறிவித்துள்ளார். இதற்கான ஆவணம் தயாரிக்கப்பட்டுவிட்டதாக ஒரு அமைச்சர் கூறினார்.

அதேவேளை இப் பகுதியில் பௌத்த பிக்குகள் தலைமையில் ஜே.வி.பி.உள்ளிட்ட சில அமைப் புக்கள் நடத்திய ஊர்வலமும் நடைபெற்றது. இதில் பொ.ஐ.மு. வினரும் கலந்துகொண்டார்கள். எனினும் இவ் இரண்டும் ஒன்றுடன் ஒன்று சந்திக்காதவாறு பொலிசார் ஏற்பாடு செய்திருந்தனர்.

## நாடாளுமன்ற...

வேண்டுகோள் விடுத்துள்ளனர். இக் கூட்டத்தில் ரணில் அமெரிக்கா சென்ற விடயம் அங்கு பேசப்பட்ட விடயங்கள் ஆராயப் பட்டுள்ளன. அத்துடன் நாடாளுமன்றத்தை மீண்டும் எந்தளவிற்கு விரைவாக கூட்டமுடியுமோ அவ்வளவிற்கு விரைவாக கூட்ட சனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. முன்னதாக அமைச்சரவையைக் கூட்டிய சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதில் தற்போதைய நிலைமை குறித்து ஆராய்ந்துள்ளதாகத் தெரியவருகிறது. (32)

## சனாதிபதி...

கால நிர்வாகத் திட்ட வரைவுக்கு எதிராக இந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேசாபிமானிகள்..

சுக்களும் திருப்பியளிக்கப்படமாட்டாது எனக் குறிப்பிட்டார். சனாதிபதி இன்னமும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாக மக்கள் ஐக்கிய முன்னணியின் தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டார். தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வரைவின் மூலம் ஈழப்பிரகடனத்தை வெளியிட்டிருப்பதாகவும் அவர் தெரிவிததார். இதேவேளை தேசாபிமான அமைப்பு உறுப்பினர்கள் மீது இரத்தினபுரியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (32)

## அவசரகால...

நீக்குவது பற்றியோ கேள்வி எழவில்லையென சனாதிபதி செயலகத்தின் ஊடகப் பணிப்பாளர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்படாமையால் அதனை நீக்குவது தொடர்பாக அறிவிக்கவேண்டிய அவசியமில்லை என சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. அவசரகாலச்சட்டம் சனாதிபதியினால் பிரகடனம் செய்யப்படவில்லை. ஆனால், ஊடகங்களே இதனை அறிவித்தன. தற்போதும் ஊடகங்களே அதனை நீக்கப்போவதாகவும் கூறுகின்றன என சனாதிபதி செயலகக் குறிப்புக் கூறுகிறது. இதேவேளைஅவசரகால நிலை தொடர்பில் வர்த்தமானி அச்சிடப் படாமையால், அவசரகாலச்சட்டத்திற்கு சட்டவலுவில்லை என அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார கூறியுள்ளார். (32)

## சமாதானமுயற்சி...

செயல்கள் அதிகரித்துள்ளன. இதனைக் கட்டுப்படுத்தும் அளவிற்கு ஜோன் அமரதுங்க இருக்கவில்லை. இதனால் இவ் அமைச்சைத் தான் பொறுப் பேற்றுள்ளதாகக் கூறினார்.

மக்கள் தொடர்பாடல் அமைச்சைப் பொறுப்பேற்றமைக்கான காரணம் எதுவும் அவர் கூறவில்லை. ஆனாலும் அரசு சமாதான முயற்சி எனக் கூறி அதன் தோற்றத்தையே மாற்றியமைக்கும் அளவிற்கு அதாவது நாட்டின் இறைமைக்கும், பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் நடந்துகொண்டனர். தொடர்ந்தே தான் அந்த மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்றதாகக் கூறியுள்ளார்.

அத்துடன், கண்காணிப்புக்குழு அமைக்கப்பட முன்னர் 6000 பேரைக் கொண்டிருந்த புலிகளின் படை இன்றைக்கு 18000 ஆக உயர்ந்துள்ளது. இதற்கு அரசாங்கம் நடந்துகொண்ட விதமே காரணம். நோர்வே ஏற்பாட்டாளர்கள் தங்களுடைய பொறுப்புக்களிலிருந்து விலகிச் சென்று சட்ட ரீதியற்ற புலிகளின் கடற்படையைச் சட்ட ரீதியான கடற்படையாக மாற்றும் அளவிற்குச் செயற்பட்டனர்.

இவ்வாறான செயற்பாட்டினால் தான் இம்மூன்று அமைச்சுக் களையும் பொறுப்பேற்க வேண்டி ஏற்பட்டது. இரண்டு சனாதிபதித் தேர்தல்களில் மக்கள் எனக்குக் கொடுத்த வாக்கின் அடிப்படையிலும், அரசியல் யாப்பின் அடிப்படையிலும் நீதியின் அடிப் படையிலும் தான் இம்முடிவினை எடுத்துள்ளதாகச் சனாதிபதி சந்திரிகா மேலும் கூறியுள்ளார்.

போர்நிறுத்த உடன்படிக்கை தொடரும் எனவும் ஆனால் நோர்வே ஏற்பாட்டாளர்கள் தங்களின் பொறுப்புக்களை மட்டும் செய்யக் கூடிய அளவில் கட்டுப்படுத்தப்படுபவர் எனவும் கூறியுள்ளார். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு போர்நிறுத்தத்தினைச் சரியான முறையில் கடைப்பிடிக்க இராணுவத்திற்கு உத்தரவாதமளித்துள்ளதாகவும் அது எதிர்காலத்தில் நடைமுறையில் இருக்கும் எனவும் அவர் கூறினார். இவ்வாறான செயற்பாடுகளுக்கு பிரதமரும், அவருடைய அரசும் முழு ஒத்துழைப்பும் வழங்குவதாகக் கூறினார்.

அரசியல் அமைப்பிற்கு முழுமையான மரியாதை கொடுத்து குறுகிய அரசியல் நோக்கத்தைக் கைவிட்டு மனிதவுரிமைகளையும்,நாட்டின் இறைமையையும் பாதுகாக்கும் வகையில் ஐ.தே.க.அரசு செயற்பட வேண்டும் எனக் கூறியுள்ளார். புலிகளின் திட்ட வரைவைப் பொறுத்த மட்டில் தங்களின் நிலையைக் கைவிடாத நிலையில் தான் அதனைக் காணக் கூடியதாகவுள்ளதாகவும் கூறி யுள்ளார்.

இவ் உரை நேற்று மதியம் நடைபெறவிருந்தபோதும் 8மணிநேரம் கடந்த இடம் பெற்றது. (32)

## புலிகளுடனான...

நடப்பேன். அதிலிருந்து நான் நகரவோ,பின்வாங்கவோ மாட்டேன் எனக் கூறியுள்ளார். அத்துடன் மக்கள் எனக்கு அளித்த அந்த உரிமையிலிருந்து நான் பாதை விலகி அவர்களுக்கு நான் ஒருபோதும் துரோகம் செய்யமாட்டேன் எனத் தெரிவித்துள்ளார். சர்வதேச சமூகமும், இலங்கைக்கு நிதி வழங்குகின்ற கொடையாளி நாடுகளும் சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற வேண்டுமெனக் கோரியுள்ளன. இதேவேளை நான் வாஷிங்டனில் இருந்தவேளை பல வெளிநாட்டு அரசுகளுடன் தொடர்பு கொண்டு பேசினேன். அவர்கள் எல்லோருமே சமாதான வழிமுறைகள் தொடர வேண்டும் எனக் கூறினர். அதைத்தான் நான் செய்யப்போகின்றேன். சமாதான முயற்சிகளில் மீண்டும் முன்னேற்றப் பாதைக்குத் திரும்புவதை நான் உறுதி செய்வேன் எனக் கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில், இச் சமாதானத்திற்குத் தான் நான் முன்னுரிமை கொடுப்பேன். இலங்கையில் நீண்ட நாட்களுக்கு நிலைத்து நிற்கக்கூடிய, பலன்தரக் கூடிய அமைதி வரவேண்டும் என்பதை நான் உறுதி செய்வேன் என ரணில் உறுதியாகக் கூறியுள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு நவம்பர் மாதம் 08ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.